**மார்ச் – 03**

# TNPSC துளிகள்

- தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தில் பத்தாண்டுகளுக்கு முன் திட்டமிடப்பட்ட வெளித் துறைமுக சரக்குக் கொள்கலன் கப்பல் முனையத்திற்கான அடிக்கல் சமீபத்தில் நாட்டப்பட்டு அதன் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.
- தமிழக முதல்வர் அவர்கள், சென்னையில் 6.09 ஏக்கர் பரப்பில் கட்டமைக்கப்படவுள்ள கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவிற்கான அடிக்கல்லை நாட்டினார்.
- சிக்கிமின் ராங்போவில் அமைக்கப்பட உள்ள அம்மாநிலத்தின் முதல் இந்திய இரயில் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
- ஒருங்கிணைந்த புலிகள் வாழ்விட வளங்காப்புத் திட்டத்தின் கீழ் (ITHCP) இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் சுந்தரவனக் காடுகள் பகுதியில் எல்லை கடந்த (நாடுகளுக்கிடையிலான) புலிகள் வளங்காப்பு திட்டத்தினை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பினை மேற்கொண்டுள்ளன.
- இந்திய நாடானது 2035 ஆம் ஆண்டிற்குள் தனது சொந்த விண்வெளி நிலையத்தை உருவாக்கி, விண்வெளித் துறையின் முக்கிய வணிக மையமாகவும் மாறும் என்று பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்.
- இந்தியப் பிரதமர் அவர்கள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் செயற்கைக்கோள் ஏவு கல ஒருங்கிணைப்பு மையம் (PIF), மகேந்திர கிரியில் (திருநெல்வேலி மாவட்டம்) உள்ள இஸ்ரோ உந்துவிசை இயக்க வளாகத்தில் பகுதியளவு கிரையோ ஜெனிக் வகையிலான ஒருங்கிணைந்த எஞ்சின் மற்றும் பரிசோதனை மையம் (SIEST) மற்றும் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் மூன்று வேக வரம்பிலான (குறையொலி, ஒத்த ஒலி வேகம் மற்றும் மீயொலி வேகம்) காற்றுச் சுரங்கம் ஆகிய மூன்று முக்கிய விண்வெளி உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஸ்டெர்லைட் குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு 2024

- உச்ச நீதிமன்றம் ஆனது, தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை மீண்டும் திறக்கக் கோரி வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த சிறப்பு அனுமதி மனுவை பிப்ரவரி 29 ஆம் தேதியன்று தள்ளுபடி செய்தது.
- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், சுற்றுச்சூழல் விதி மீறல்களை ஏற்படுத்துகிறது என்ற காரணத்திற்காக அந்த ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என்ற மாநில அரசு மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) அறிவித்த முடிவை உறுதி செய்த சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் உறுதி செய்கிறது.
- தாமிரபரணி நதிக்கரையை ஒட்டியமைந்த தனியார் நிலங்கள் உட்பட 11 இடங்களில் வகைத் தொகையற்ற தாமிரக் கசடுகளை கொட்டியது உட்பட ஆலையில் மீண்டும் மீண்டும் பல விதி மீறல்கள் நடைபெற்றன.
- ஆலையின் ஒரு பகுதியில் அபாயகரமான கழிவுகளை கொட்டுவதற்கான அங்கீகாரம் பெறுவதில் தோல்வி ஏற்பட்டது.
- இருப்பினும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது தனது கடமைகளை நிறைவேற்றச் செய்வதில் அலட்சியம் காட்டியுள்ளது என்று உயர்நீதிமன்றம் ஒப்புக்

கொண்டது.

**JULY 1997:** More than 90 people get hospitalised after a sulphur dioxide gas leak in the plant

**MARCH 2013:** Former TN CM J Jayalalithaa government orders the closure of the unit

**MAY 2013:** The National Green Tribunal overturns the order

**FEBRUARY 2018:** Protests resurface after Sterlite announced plans to double the plant's annual capacity

**MAY 22, 2018:** Police firing kills 13 people and left 102 people injured during a protest

**MAY 24, 2018:** The Tamil Nadu Pollution Control Board ordered the unit's closure

**JUNE 20, 2022:** Vedanta comes out with an expression of interest (EoI) in selling the Sterlite unit



**Vedanta constructed the Sri Peraathu Selvi Ammal Thirukovil a few months ago**

**APRIL 10, 2023:** A Supreme Court bench allowed Sterlite Copper to perform maintenance works at its Thoothukudi plant

**JUNE 12, 2023:** Sterlite comes out with an advertisement inviting EoI to carry out 'restart activities'


**AUGUST 22, 2023:** Final hearing to begin in the Supreme Court

## தமிழகத்தின் நிறுவப்பட்ட எரிசக்தி திறன் 2026-27

- 2021-22 ஆம் ஆண்டில் 35,690 மெகாவாட்டாக உள்ள தமிழ்நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின்னாற்றல் உற்பத்தித் திறன் ஆனது சுமார் 31.8% அதிகரித்து 2026-27 ஆம் ஆண்டில் 47,048 மெகா வாட்டாக அதிகரிக்கும்.
- தமிழக மாநிலத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் 20 ஆம் தேதி அதிகபட்சமாக 19,387 மெகா வாட் மின்னாற்றல் தேவையானது பதிவானது.
- இது தென் மாநிலங்களில் அதிக மின் தேவையைக் கொண்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் பதிவான 16,891 மெகாவாட் என்ற உண்மையான மின்னாற்றல் தேவையுடன் ஒப்பிடும் போது, 2026-27 ஆம் ஆண்டில் தமிழகத்தின் உச்சக் கட்ட மின் தேவை 21,736 மெகா வாட்டாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2026-27 ஆம் ஆண்டில் மொத்த ஆற்றல் தேவையானது 1,44,0,86 அலகுகளாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 13,685 மெகாவாட்டாக இருந்த மாநிலத்தின் நிலக்கரி சார்ந்த உற்பத்தி திறன் ஆனது 2026-27 ஆம் ஆண்டில் 18,128 மெகாவாட்டாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2,440 மெகாவாட்டாக இருந்த அணுசக்தி சார்ந்த மின்னாற்றல் உற்பத்தி திறன் ஆனது 5,940 மெகாவாட்டாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிற, அதே நேரத்தில் எரிவாயு மற்றும் புனல் மின்னாற்றல் சார்ந்த மின் உற்பத்தித் திறன் ஆனது தேக்க நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 9,871 மெகாவாட்டாக இருந்த தமிழ்நாட்டின் நிறுவப்பட்ட காற்றாலை உற்பத்தி திறன்

ஆனது 2026-27 ஆம் ஆண்டில் 12,556 மெகாவாட்டாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

- சூரிய சக்தி திறன் 2022 மார்ச் இறுதியில் 5,112 மெகாவாட்டிலிருந்து 2026-27 ஆம் ஆண்டில் 5,316 மெகா வாட்டாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அதிகரித்து வரும் பசுமை எரிசக்தி மூலங்களில், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் நிலத்தில் இருந்து எடுக்கப்படும் ஆற்றல் சேமிப்புத் திட்டங்களின் நிறுவப்பட்ட திறன் 900 மெகாவாட் ஆக இருக்கும் என்று அறிக்கையில் எதிர்பார்க்கப்படுகிறது.
- 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதியில் இந்தியாவில் நிறுவப்பட்ட மின்சார உற்பத்தித் திறன் ஆனது சுமார் 609.6 ஜிகாவாட் ஆக இருக்கும்.
- ஒட்டு மொத்த மின்னாற்றல் தேவையானது 2,77,201 மெகாவாட்டாக இருக்கும்.




## 2024 ஆம் ஆண்டு மாவட்ட நீதிபதிகள் தேர்வு முடிவு ரத்து


- 245 உரிமையியல் நீதிபதிகள் பணி நியமனத்திற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்ட தற்காலிகத் தேர்வுப் பட்டியலை ரத்து செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆனது, தற்காலிகப் பட்டியலை உருவாக்கும் போது இடஒதுக்கீடு விதியை சரியாகப் பின்பற்றவில்லை என்று உயர் நீதிமன்றம் கூறியது.
- 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் 27வது பிரிவினைப் பின்பற்றி 92 "பின்னடைவு" காலி பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.
- மீதமுள்ள 153 தற்காலத்திய காலிப் பணியிடங்கள் ஆனது இட ஒதுக்கீட்டின் பொது

விதியைப் பின்பற்றி நிரப்பப்பட வேண்டும்.

TNPSC
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

# தேசியச் செய்திகள்

## வீட்டு உபயோக நுகர்வுக் கணக்கெடுப்பு – மாநிலங்கள் தர வரிசை




- 2022-23 ஆம் ஆண்டு மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினம் (MPCE) ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- சிக்கிம் மாநிலமானது, கிராமப்புற மற்றும் நகர்ப்புறக் குடும்பங்களில் அதிக செலவினங்களைப் பதிவு செய்துள்ள அதே சமயம் சத்தீஸ்கர் மாநிலமானது இரண்டு அளவுருக்களிலும் மிகக் குறைந்த மதிப்பினைப் பெற்றுள்ளது.
- சிக்கிம் மாநிலமானது கிராமப்புறங்களில் சராசரியாக 7,731 ரூபாய் மற்றும் நகர்ப் புறங்களில் 12,105 ரூபாய் மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினம் என்ற அளவில் முதல் இடத்தில் பதிவாகியுள்ளது.
- ஜார்க்கண்ட் மாநிலம் ஆனது சராசரியாக 2,763 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர்

நுகர்வுச் செலவினத்துடன் சத்தீஸ்கர் மாநிலத்தினை முந்தியுள்ள நிலையில், அதற்கு முந்தைய இடத்தில் 2,950 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் ஒடிசா உள்ளது.


- நகர்ப்புற நுகர்வில், 4,768 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் பீகார் இரண்டாவது இடத்தையும், 4,880 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் மணிப்பூர் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- மாநிலங்களில், கிராமப்புற மற்றும் நகர்ப்புற நுகர்வு ஆகியவற்றில் முறையே சராசரியாக 7,367 ரூபாய் மற்றும் 8,734 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் கோவா மாநிலமானது இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- கிராமப்புறக் குடும்பங்களின் செலவினங்களில் 5,924 ரூபாய் என்ற மதிப்புடன் கேரளா மூன்றாவது இடத்தில் உள்ள நிலையில் மேலும் நகர்ப்புறங்கள் பிரிவில் அருணாச்சலப் பிரதேசம் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- மாநிலங்களுக்கிடையேயான சராசரி மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்தில் உள்ள கிராமப்புற-நகர்ப்புற வேறுபாடாடு ஆனது மேகாலயாவில் (83 சதவீதம்) அதிக அளவிலும், அதைத் தொடர்ந்து சத்தீஸ்கரில் (82 சதவீதம்) மிக அதிக அளவில் பதிவாகி இருப்பதாகவும் கண்டறியப்பட்டது.
- ஒன்றியப் பிரதேசங்களில், சண்டிகரில் மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினம் அதிகமாக உள்ளது (கிராமப்புறத்தில் சுமார் 7,467 ரூபாய் மற்றும் நகர்ப்புறத்தில் 12,575 ரூபாய்) என்பதோடு, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களின் செலவினங்கள் முறையே லடாக் (ரூ. 4,035) மற்றும் லட்சத்தீவு (ரூ. 5,475) ஆகியவற்றில் குறைந்தபட்ச செலவினம் என்ற வகையில் பதிவாகியுள்ளது.
- 21 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் பதிவான சராசரி மாதாந்திர தனி நபர் நுகர்வுச் செலவினம் ஆனது 2022-23 ஆம் ஆண்டின் ரூ.6,459 என்ற அளவில் தேசிய சராசரியை விட அதிகமாக இருந்தது.
- ஜம்மு & காஷ்மீர், மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம், அகில இந்திய எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது குறைந்த நுகர்வு அளவைக் கொண்டிருந்தன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மன்னார் வளைகுடாவில் உள்ள உயிருள்ள பவளப்பாறைகளின் பங்கு

- ‘மன்னார் வளைகுடாவின் பவளப்பாறைகள்: நிலை மற்றும் மேலாண்மை முறைகளில் உள்ள பத்தாண்டு கால மாற்றங்கள்’ என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாடு 2.0 என்ற நிகழ்வில் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியாவின் முக்கிய பவளப்பாறைப் பகுதிகளில் ஒன்றான மன்னார் வளைகுடாவில் 2005 ஆம் ஆண்டில் 37% ஆக இருந்த உயிருள்ள பவளப்பாறைகளின் சராசரி பரவல் ஆனது 2021 ஆம் ஆண்டில் 27.3% ஆகக் குறைந்தது.
- உயிருள்ள பவளப்பாறைகளின் பங்கு 2009 ஆம் ஆண்டில் 42.9% என்ற வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது.
- இரண்டாவது (2010) மற்றும் மூன்றாவது (2016) உலகளாவிய பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வுகள் காரணமாக பெரும்பாலான பவளப்பாறைகள் அழிந்ததன் காரணமாக அவற்றின் எண்ணிக்கை குறைந்தது.
- கீழக்கரை மற்றும் தூத்துக்குடி பகுதிகளை விட மண்டபம் பகுதியில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது.

- 2005 ஆம் ஆண்டின் முதல்நிலைக் கணக்கெடுப்பில் 117 பவளப்பாறை இனங்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில், புதுப்பிக்கப்பட்ட பெயரிடல் ஆனது அந்த எண்ணிக்கையை 132 ஆக உயர்த்தியதுடன் 2021 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட அடுத்தடுத்த கணக்கெடுப்புகளில் மேலும் அதிக எண்ணிக்கையிலான பவளப் பாறைகள் பதிவு செய்யப் பட்டன.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலகளாவிய அறிவுசார் சொத்துக் குறியீடு 2024




| Year | Rank | Score (%) |
|---|---|---|
| 2019 | 36 | 36.04 |
| 2020 | 40 | 38.46 |
| 2021 | 40 | 38.40 |
| 2022 | 43 | 38.64 |
| 2023 | 42 | 38.64 |

- அமெரிக்க வர்த்தகச் சபையானது அதன் 12வது சர்வதேச அறிவுசார் சொத்துக் குறியீட்டினை வெளியிட்டது.

- இந்தக் குறியீட்டில் மதிப்பிடப்பட்ட 55 நாடுகளில் 38.64 சதவீத மதிப்பெண்களுடன் இந்தியா 42வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் முதலிடத்தில் அமெரிக்காவும், அதைத் தொடர்ந்து ஐக்கியப் பேரரசு மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இடம் பெற்றுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## பொது மற்றும் தனியார் சொத்து சேத மீட்பு மசோதா

- அரசு மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப் படும் பெரும் சேதங்களுக்கு வன்முறையாளர்கள் பொறுப்பேற்கச் செய்யும் ஒரு மசோதாவை உத்தரகாண்ட் அரசு தாக்கல் செய்ய உள்ளது.
- இதற்கு உத்தரகாண்ட் மாநிலப் பொது மற்றும் தனியார் சொத்து சேத மீட்பு மசோதா என்று பெயரிடப் பட்டுள்ளது.
- கலவரம் மற்றும் பிற இடையூறுகளை ஏற்படுத்திய நபர்கள் இந்த மசோதாவின் கீழ் அதற்கான இழப்பீடுகளை வழங்க வேண்டும்.
- உத்தரப் பிரதேச மாநில அரசு ஆனது 2020 ஆம் ஆண்டில் இதே போன்ற மசோதாவை நிறைவேற்றியது.
- இதைத் தொடர்ந்து ஹரியானா மாநில அரசும் அத்தகைய சட்டத்தை இயற்றியுள்ள நிலையில் அத்தகையச் சட்டத்தை இயற்றிய மூன்றாவது மாநிலமாக உத்தரகாண்ட் விளங்கும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★